விநாயகர் சதுர்த்தி விழா ஆலோசனைக் கூட்டம்

பல்லடம், ஆக.18: பல்லடம் அருகே உள்ள பொங்கலூர் ஒன்றியத்துக்குள்பட்ட தேவனம்பாளையம் சுவாமி விவேகானந்தா இளைஞர் நற்பணி மன்ற அலுவலகத்தில், விநாயகர் சதுர்த்தி விழா ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் விநாயகர் சதுர்த்தி நாளில் 6 அடி உயர விநாயகர் சிலை வைத்து கணபதி ஹோமம் நடத்தி வழிபடுவது, காவடி ஆட்டம், குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டி, உறியடித்தல் போட்டி நடத்துவது, அன்னதானம் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்த கூட்டத்தில் செயலாளர் சிவகுமார், பொருளாளர் பாலாஜி, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சதீஷ்குமார், ரகுபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உடுமலையில்

சர்வதேச அளவிலான கராத்தே போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு

பரிசுக் கோப்பைகளுடன் மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்கள்.

உடுமலை, ஆக.18: சர்வதேச அளவிலான கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

5-ஆவது சர்வதேச கராத்தே 'ஓபன்' சாம்பியன்ஷிப் போட்டி உடுமலையில் அண்மையில் நடைபெற்றது. இதில் இலங்கை, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதில் கோவையைச் சேர்ந்த காரோன் ஆய்டன் (5), தக்சித் (8) ஆகியோர் 'கட்டா' பிரிவில் முதல் பரிசை வென்றனர். மேலும் சாய் ரியான் (7), கிஷன்(12) ஆகியோர் இரண்டாம் பரிசையும், கேடின் ஏட்ரியன் (12), விஷ்ருத் தேவராஜ் (12), பிரஜன் கிருஷ்ணன் (5) ஆகியோர் மூன்றாம் பரிசையும் வென்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

முதல் முயற்சி...

பல்லடம் ஒன்றியம், ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சிக்குள்பட்ட அறிவொளி நகரில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை விளையாட்டு சீருடை அணிந்து வரும் வழக்கத்தை கடந்த 15-ஆம் தேதி முதல் பள்ளி ஆசிரியர்கள் செயல்படுத்தியுள்ளனர். அரசுப் பள்ளியின் புதிய முயற்சியை அப்பகுதி மக்கள் பாராட்டியுள்ள நிலையில், தனியார் பள்ளிகளுக்கு இணையாக வண்ண வண்ண விளையாட்டு சீருடைகளுடன் வந்த மாணவ, மாணவிகள்.

நண்பர் கொலை வழக்கில் முதன்மைக் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

திருப்பூர், ஆக.18: நண்பரைக் கொலை செய்த வழக்கில் முதன்மைக் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து திருப்பூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருப்பூர் நீதிமன்ற வழக்குரைஞர் தினேஷ்குமார் சகோதரர் அசோக்குமாருக்கும், நயீம் என்பவருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. நயீமின் திருமணத்துக்கு மீறிய உறவு விவகாரத்தை, அவரது மனைவியிடம் அசோக்குமார் கூறியதால் குடும்பத்தில் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த நயீம், அசோக்குமாரைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளார்.

கடந்த 2024 பிப்ரவரி 18-ஆம் தேதி ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சி முடிந்து, அவினாசி கவுண்டம்பாளையம் ஏபிடி லே-அவுட் பகுதியிலுள்ள அறையில் நயீம், ஆல்வின், வினோத்குமார், அசோக்குமார் ஆகியோர் மது அருந்தியுள்ளனர். அப்போது ஏற்பட்ட தகராறில் பிப்ரவரி 19-ஆம் தேதி அதிகாலை கத்தி மற்றும் கடப்பாரையால் குத்தி அசோக்குமாரை நயீம் கொலை செய்துள்ளார். மேலும் அவருடன் இருந்த ஆல்வின், சுகானா, அபிநயலட்சுமி, வினோத்குமார், பிலால் ஆகியோர் காய்ந்த இலைகளைப் போட்டு உடலை மறைத்து தடயங்களை அழிக்க முயன்றுள்ளனர்.

இதுதொடர்பாக அனுப்பர்பாளையம் போலீஸார் வழக்குப் பதிந்து 6 பேரையும் கைது செய்தனர். இந்த வழக்கு திருப்பூர் எஸ்சி,எஸ்டி சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி சுரேஷ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி சுரேஷ், முதன்மைக் குற்றவாளியான நயீமுக்கு பிரிவு 302-இன் கீழ் ஆயுள் தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும், அபராதத்தைக் செலுத்த தவறினால் மேலும் 6 மாதம் சிறைத் தண்டனையும் விதித்து உத்தரவிட்டார்.

6 மாதங்கள் சிறை: மேலும் தடயங்களை அழிக்க உடந்தையாக இருந்த குற்றத்துக்காக ஆல்வின், சுகானா, அபிநயலட்சுமி, வினோத்குமார், பிலால் ஆகிய 5 பேருக்கு தலா 6 மாதம் சிறைத் தண்டனையும், தலா ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்தார்.

அபராதத் தொகையை செலுத்த தவறினால் கூடுதலாக 3 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என வும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் அரசு தரப்பில் வழக்குரைஞர் பூங்கொடி ஆஜரானார்.

குறுமைய அளவிலான விளையாட்டுப் போட்டி: கருக்கன்காட்டுப்புதூர் பள்ளி மாணவர்கள் வெற்றி

குறுமைய அளவிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று மாவட்ட போட்டிக்கு தேர்வான மாணவர்கள்.

அவிநாசி, ஆக.18: அவிநாசி குறுமைய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் நடுவச்சேரி கருக்கன்காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் வெற்றி பெற்று மாவட்ட அளவிலான போட்டிக்குத் தேர்வு பெற்றனர்.

திருப்பூர் மாவட்டம், அவிநாசி குறுமைய அளவிலான விளையாட்டுப் போட்டிகள், குன்னத்தூர் கருப்பண்ண நாடார் உயர்நிலைப் பள்ளியில் அண்மையில் நடைபெற்றது.

இதில் Ball Badminton போட்டியில், அவிநாசி அருகே நடுவச்சேரி கருக்கன்காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் 14 வயதுக்குள் பட்டோர், 17 வயதுக்குள் பட்டோர் ஆகிய இரு பிரிவுகளில் வெற்றி பெற்று, திருப்பூர் மாவட்ட அளவிலான போட்டிகளுக்குத் தேர்வு பெற்றுள்ளனர். இவர்களுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் (பொ) அனிதா சாந்தி பிரியா, உடற்கல்வி ஆசிரியர் கார்த்திகேயன், ஆசிரியர்கள், பெற்றோர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் இணையதளத்தில்

அனைத்து மொத்தக் கழிவு உருவாக்குபவர்களும் 15 நாள்களுக்குள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்

திருப்பூர், ஆக.18: திருப்பூர் மாநகராட்சியில் அனைத்து மொத்தக் கழிவு உருவாக்குபவர்களும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமென என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக திருப்பூர் மாநகராட்சி ஆணையர் எம்.பி.அமித் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

திருப்பூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி நிறுவன அமைப்புகள், வணிக நிறுவனங்கள், குடியிருப்பு நலச் சங்கங்கள், உணவகங்கள், விடுதிகள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள், சந்தைகள், தொழிற்சாலைகள் மற்றும் பிற பெரிய நிறுவனங்கள் அனைத்தும் மொத்தக் கழிவு உருவாக்குபவர்கள் எனும் பிரிவின் கீழ் அடங்கும்.

மொத்தம் 20,000 ச.மீ. அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவு கொண்ட கட்டடம் அல்லது நாளொன்றுக்கு 40,000 லிட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீர் நுகர்வு கொண்ட வளாகம், நிறுவனம் அல்லது நாளொன்றுக்கு 100 கி.கி. அல்லது அதற்கு மேற்பட்ட திடக்கழிவை உருவாக்கும் நிறுவனம் அல்லது அமைப்பு உள்ளிட்ட அனைத்து மொத்தக் கழிவு உருவாக்குபவர்களும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் புதன்கிழமை (ஆக.19) முதல் 15 நாள்களுக்குள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பதிவை முடிக்கத் தவறுவோர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கழிவுகள் உருவாகும் இடத்திலேயே ஈரக் கழிவு, உலர் கழிவு, சுகாதாரக் கழிவு மற்றும் சிறப்புக் கவனிப்புக் கழிவு எனத் தனித்தனியாகப் பிரிப்பதை கழிவு உருவாக்குபவர்கள் உறுதி செய்ய வேண்டும். ஈரக்கழிவுகளை தங்களது வளாகத்திலேயே மேலாண்மை செய்ய வேண்டும். இதர பிரிக்கப்பட்ட கழிவுகளை தங்களது வளாகத்தின் நுழைவாயிலில் வைத்து மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட முகமையிடம் ஒப்படைக்க வேண்டும்.

கழிவு உருவாக்குபவரால் தங்களது வளாகத்துக்குள் ஈரக் கழிவை மேலாண்மை செய்ய இயலாதபட்சத்தில், திடக்கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் திருப்பூர் மாநகராட்சி மூலமாக நிர்ணயிக்கப்பட்ட சான்றிதழ் அல்லது இணக்கச் சான்றைப் பெற வேண்டும்.

மொத்தக் கழிவு உருவாக்குபவர்கள் தங்களது வளாகம், பதிவேடுகள் மற்றும் கழிவு மேலாண்மை வசதிகளை, திருப்பூர் மாநகராட்சி அல்லது திடக்கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் அதிகாரம் பெற்ற வேறு எந்தவொரு அதிகாரியும் ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும். மேலும், ஆய்வு அல்லது சரிபார்ப்பின்போது தேவைப்படும் தகவல்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து சங்கங்களின் கூட்டத்தைக் கூட்ட பனியன் ஃபேக்டரி லேபர் யூனியன் கோரிக்கை

திருப்பூர், ஆக.18: அனைத்து சங்கங்களின் கூட்டத்தைக் கூட்ட பனியன் ஃபேக்டரி லேபர் யூனியன் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் என்.சேகர், தொழிலாளர் உதவி ஆணையருக்கு அனுப்பியுள்ள மனு:

திருப்பூர் மாவட்டத்தின் நல வாரிய செயல்பாடுகளில் ஏற்படும் குறைகளுக்கு பேசி தீர்வு காண மாவட்ட ஆட்சியர் தலைமையில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, அதன்மூலமாக தீர்வு காணப்பட்டு வந்தது. இந்நிலையில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பிறகான ஆட்சி மாற்றம் காரணமாக, கடந்த 6 மாதங்களுக்கு மேலாக கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை.

இதனால் வாரியத்தில் பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனு உள்ளிட்டவற்றுக்கு ஏற்படும் குறைகளுக்கு தீர்வு காண சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எளிதில் அணுகி முறையிட முடிவதில்லை. இப்பிரச்னைகளில் இருந்து தீர்வு காண அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தொழிற் சங்கங்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வணிக வரித் துறை மாநில அலுவலர் தற்கொலை

திருப்பூர், ஆக.18: திருப்பூரில் வணிக வரித் துறை மாநில அலுவலர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டது குறித்து போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பூர் வணிக வரித் துறை அலுவலகத்தில் திருச்சியைச் சேர்ந்த சுரேஷ் மாநில வரி அலுவலராகப் பணிபுரிந்து வந்தார். இவருக்கு மனைவி, 2 மகன்கள் உள்ளனர். குடும்பத்தினர் திருச்சியில் உள்ள நிலையில், திருப்பூர் அருகே உள்ள இந்திரா நகரில் அறை எடுத்து தங்கி சுரேஷ் பணிக்கு சென்று வந்துள்ளார்.

கடந்த சுதந்திர தின விடுமுறைக்காக திருச்சிக்கு சென்று வந்த சுரேஷுக்கு, அவரது மனைவி திங்கள்கிழமை கைப்பேசியில் அழைத்துள்ளார். அழைப்பை சுரேஷ் எடுக்காததால் உடன் பணிபுரியும் அலுவலக நண்பர்களுக்குத் தொடர்புகொண்டு, அவரது அறைக்குச் சென்று பார்த்து தகவல் அளிக்குமாறு கூறியுள்ளார். அதன்படி சுரேஷின் அறைக்குச் சென்று பார்த்தபோது கதவு தாழிடப்பட்டிருந்தது.

இதைத்தொடர்ந்து அளிக்கப்பட்ட தகவலின்பேரில் 15 வேலம்பாளையம் போலீஸார் சென்று கதவைத் திறந்து பார்த்தபோது சுரேஷ் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் இருந்ததாக தெரிகிறது. இதையடுத்து சடலத்தை மீட்டு உடற்கூறாய்வுக்காக திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். பணிச்சுமை அல்லது குடும்பப் பிரச்னை காரணமாக தற்கொலை செய்து கொண்டாரா என்பது குறித்து வழக்குப் பதிந்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

WIZZMONI FINANCIAL SERVICES LIMITED
(formerly Unimoni Financial Services Limited)
RO: N.G. 12 & 13 Ground Floor, North Block, Manipal Centre, Dickenson Road, Bangalore - 560 042. CIN No. U85110KA1995PLC018175

பொது அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் ஏலமானது விஸ்மோனி பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (முன்னர் யூனிமோனி பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்) நிறுவனத்தால் 25-08-2026 அன்று காலை 10:00 மணிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள அந்தந்த இடங்களில் நடத்தப்படும். ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள், தங்கள் நிறுவனத்தொகையை செலுத்தத் தவறிய எங்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளைச் சேர்ந்தவை. இந்தக் கடன்தாரர்களுக்கு எங்கள் ஏல அறிவிப்புகள் முறையாக வழங்கப்பட்டுள்ளன. ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள் கிளை பெயருடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் தவணை கடந்த கடன் கணக்குகளைச் சேர்ந்தவை.

AUCTION CENTRE ADDRESS & LOAN NOS: ERODE (ERD - M/S. SARAVANA COMPLEX,81/76, DEEPA MEDICALS UPSTAIRSTEACHERS COLONY BUS STOP,CONTACT:8012581007)2196438,2219388,2253151,2321544,2299993

(Reserves the right to alter the number of accounts to be auctioned &/ postpone / cancel the auction without any prior notice)

திருப்பூர் மாநகராட்சி
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.E1/4538/2026 நாள் : 17.08.2026

1. 6வது மாதிய நிதி குழுவின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் ட்ரோன் மற்றும் DGPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, LiDAR மற்றும் பல்லோ சாய்வு போணங்களில் (4 Oblique + 1 Nadir) படமெடுக்கும் கேமரா மூலம் 2D/3D வரைபடங்களை உருவாக்குதல் / தயாரித்தல் பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. மேற்படி திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.152.00 இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை https://tntenders.gov.in இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in இணையதள முகவரியில் 18.08.2026 முதல் 08.09.2026 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் 24.08.2026 அன்று காலை 11.00 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 08.09.2026 அன்று மாலை 3.00 மணி வரையில்.
7. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 09.09.2026 அன்று மாலை 3.30 மணி.
8. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டுத் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி

செ.ம.தொ.இ/2605/ஒப்பந்தப்புள்ளி/2026

பெயர் மாற்றம்

நான் J P ARULMOZHI, W/o. Periasamy Jaganathan (பிறந்த ஊர் : ஈரோடு), க.எண். 48, பாப்பாத்தி காடு 2, முனிசிபல் காலனி, வீரப்பன்சத்திரம், ஈரோடு 638004, ஈரோடு மாவட்டம் என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி ARULMOZHI PERIASAMY JAGANATHAN என்று அழைக்கப் படுவேன்.

11.08.2026 ERODE J P ARULMOZHI

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
மின்னணு- ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கீழ்க்காணும் பணிகளுக்காக சென்னைக் குடிநீர்வாரியத்தில் மேற்கொள்ளும் முறைப்படி ஒரு உறையில் தகுதிநிலை ஒவ்வொன்றாக ஒப்பந்தங்கள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்குட்பட்டு இ-ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

வ. எண்	ஒப்பந்தப்புள்ளியின் பெயர் மற்றும் எண்	ஒப்பந்த முன்வைப்புத் தொகை	தகுதி	மின்னணு ஒப்பந்தம் சமர்ப்பிக்க இறுதி தேதி	மின்னணு ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி
1.	புளியம் நிலையத்தில் தற்போதுள்ள 750KVA மின் ஜெனரேட்டர் செட்டிற்குப் பதிலாக புதிய 500 KVA மின் ஜெனரேட்டர் செட் பொருத்துதல் மற்றும் பண்டல அலுவலகம் II-இல் உள்ள மின்சார உந்து நிலையத்தில் தற்போதுள்ள மின் ஜெனரேட்டர் செட் நிறுவும் பணி, ஒப்பந்த எண்/செயற்பொறி/3748/ 2026-27	ரூ. 87,900.00	வகுப்பு I & II மாநில அரசு தேவை	08.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை	09.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்கும் பிறகு
2.	தகுதி VI. பணிகளை 73-இல் பெரியார் நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டு வளர்ச்சி முதலீட்டுத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து (WDS) 200 மிமீ விட்டமுள்ள நெகிழிகுழாய் பிரதியிடும் பணி, ஒப்பந்த எண்/செயற்பொறி/3769/ 2026-27	ரூ. 60,000/-	வகுப்பு I & II மாநில அரசு தேவை	08.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணிவரை	09.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்கும் பிறகு
3	ஒப்பந்த முன்வைப்பு தொகையை இணையவழி பரிமாற்றமாகவோ இணையதளத்தின் மூலமாகவோ மட்டுமே செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்கள் செலுத்தும் ஒப்பந்த முன்வைப்பு தொகையை மெஜாஸ்டிக்ஸாக எங்கே செய்யப்பட்ட நகரம் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்க வேண்டும்.				
4	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இ-ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கலாம். பிற ஆவணத்து விவரங்களையும் 20.08.2026 முதல் இணையதளத்தில் வெளியிடும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும்.				

செ.ம.தொ.இ./2608/ஒப்பந்தப்புள்ளி/2026 மேற்பார்வைப்பொறியாளர் (ஓமக)(பொ)

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில் மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002. மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : உடுமலைப்பேட்டை கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.சரண் மிளாஸ்டிக்ஸ் – உரிமையாளர்: திரு.K.சதீஷ், 23, திருப்பூர் சாலை, ஏரிபாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642126. **திரு.K.சதீஷ்,** 23, திருப்பூர் சாலை, ஏரிபாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642126. **உத்தரவாதம் அளித்தவர்: திரு.A.கிருஷ்ணசாமி,** எண்.- 21A, சுபாஷ் தெரு, ஏரிபாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642126. **கடன் நிலுவைத் தொகை : 14.08.2026 வரையில் ரூ.26,71,250.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி :** 27.08.2024. **அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி :** 07.11.2024. **சொத்து விபரம் : சொத்து -1 :** மொத்தம் 962 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம் சகிதமாக கதவு எண் 4A (பழையது) & கதவு எண் 21A (புதியது), வார்டு எண் B, பிளாக் எண் 2, TS No. 31, உடுமலைப்பேட்டை நத்தம், S.F.No. 134 (பகுதி), நகராட்சி வார்டு எண் 5 (பழையது) & 1 (புதியது), சுபாஷ் தெரு, ஏரிபாளையம் கிராமம், உடுமலைப்பேட்டை நகரம் மற்றும் தாலுகா, திருப்பூர் மாவட்டம் -642126-ல் அமைந்துள்ளது. **திரு.A.கிருஷ்ணசாமி அவர்களுக்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.46,10,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.4,61,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-.**

சொத்து 2 : 462.00 சதுரடி விஸ்தீரணம் உள்ள நிலம் மற்றும் கட்டிடம் சகிதமாக கதவு எண்.17, SF No:129A1A, TS No: 22, வார்டு-B, பிளாக் எண்.2, சுபாஷ் வீதி, ஏரிபாளையம் கிராமம், உடுமலைப்பேட்டை நகரம் மற்றும் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்-642126 ல் அமைந்துள்ளது. **காப்பு விலை : ரூ.10,90,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.1,09,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி :** 19.09.2026. **ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 14.09.2026 முதல் 17.09.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 17.09.2026 மாலை 6.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, உடுமலைப்பேட்டை கிளை : Mob No :8489903035, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903057**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **17.09.2026,** மாலை **6.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, உடுமலைப்பேட்டை கிளை : Mob No :8489903035, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 14.08.2